# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**17-11-2022**

**Wesite Link** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**Faceook Link** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மாநில செய்திகள்

### 1. பூக்கடை காவல் நிலையத்துக்கு ஐஎஸ்ஓ தரச்சான்று

- ❖ சென்னை பூக்கடை காவல் நிலையத்துக்கு 'ஐஎஸ்ஓ' தரச்சான்றிதழ் வழங்கப்பட்டது.
- ❖ சென்னை பூக்கடை காவல் நிலையம் 1876-ஆம் ஆண்டு மதராஸ் பட்டணமாக இருந்தபோதே தொடங்கப்பட்ட மிகப்பழைமை வாய்ந்த காவல் நிலையம். 2006-ஆம் ஆண்டு இந்தக் காவல் நிலையத்துக்கு புதிய கட்டடம் கட்டப்பட்டது.
- ❖ இதன் தொடர்ச்சியாக, தற்போது காவல் நிலையம் தூய வெண்மை நிறமாக மாற்றம் செய்யப்பட்டது.
- ❖ இந்திய தர கவுன்சில்-
  - ✓ இந்திய அரசாங்கத்தால் (QCI GOI) பாதுகாப்பு மற்றும் சுகாதார சான்றிதழுக்கான பணியிட மதிப்பீட்டுக்காக சர்வதேச தர கட்டுப்பாட்டுச் சான்றிதழான ஐஎஸ்ஓ 9001 : 2015 வழங்கி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## மத்திய செய்திகள்

### 1. 15.24 லட்சம் சுற்றுலாப் பயணிகள் இந்தியா வந்துள்ளனர்.

- ❖ இவர்களில் அதிகபட்சமாக அமெரிக்காவிலிருந்தும், அதற்கடுத்து வங்கதேசத்திலிருந்தும் வந்துள்ளனர்.
- ❖ கரோனா பெருந்தொற்று தடுப்பு விதிமுறைகள், விசா விதிமுறைகளில் கடந்த ஆண்டு கட்டுப்பாடுகள் சில விதிக்கப்பட்டிருந்தபோதிலும் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.
- ❖ இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:
  - ✓ கடந்த ஆண்டு இந்தியா வந்த மொத்த சுற்றுலாப் பயணிகளில் 74.39 சதவீதம் பேர் 10 நாடுகளைச் சேர்ந்தவர்கள்.
  - ✓ மீதம் 25.61 சதவீதம் பேர் பிற நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
  - ✓ கடந்த ஆண்டு ஜன.1- ஆம் தேதிமுதல் டிச. 31-ஆம் தேதிவரை மொத்தம் 15 லட்சத்து 24 ஆயிரத்து 469 பேர் இந்தியா வந்துள்ளனர்.

## மாநாடு

### 1. இந்தியாவிடம் ஜி20 தலைமைப் பொறுப்பு

- இந்தியாவில் அடுத்த ஆண்டு ஜி20 உச்சி மாநாடு நடைபெற உள்ள நிலையில், அந்தக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியாவிடம் இந்தோனேசியா (நவ.16) ஒப்படைத்தது.
- இந்தோனேசியாவின் **பாலி தீவில்** தொடங்கிய ஜி20 உச்சி மாநாடு, உறுப்பு நாடுகளின் கூட்டுத் தீர்மானத்துடன் முடிவுற்றது. அதன்பிறகு நடைபெற்ற நிகழ்ச்சியில், கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை பிரதமர் நரேந்திர மோடியிடம் **இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ** ஒப்படைத்தார்.
- அப்போது, 'அனைத்து நாடுகளின் ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலமாக ஜி20 மாநாட்டை உலக நலனுக்கான செயலூக்கம் அளிக்கும் அமைப்பாக உருவாக்க முடியும்' என்று பிரதமர் மோடி கூறினார்.
- ஜி20ல் கட்டமைப்பில் ஆர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரேஸில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், தென் கொரியா, மெக்சிகோ, ரஷியா, சௌதி அரேபியா, தென்னாப்பிரிக்கா, துருக்கி, பிரிட்டன், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகிய **20 நாடுகள் அங்கம்** வகிக்கின்றன.
- உலகின் சுமார் 85 சதவீத பொருளாதார மதிப்பையும், சுமார் 75 சதவீத வர்த்தகத்தையும், சுமார் 65 சதவீத மக்கள் தொகையையும் ஜி20 கூட்டமைப்பு நாடுகளே கொண்டுள்ளன.
- **தலைமைப் பொறுப்பு ஒப்படைப்பு:**
  - ✓ கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை வரும் டிசம்பர் 1-ஆம் தேதியிலிருந்து அதிகாரபூர்வமாக இந்தியா ஏற்கவுள்ளது.
  - ✓ அடுத்த உச்சி மாநாடு தலைநகர் தில்லியில் 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 9, 10 ஆகிய தேதிகளில் நடத்தப்பட உள்ளது.
  - ✓ 'ஒரே பூமி; ஒரே குடும்பம்; ஒரே எதிர்காலம்' என்ற இந்தியாவின் ஜி20 தலைமைப் பொறுப்பு கருப்பொருளில் அடங்கியுள்ளன என்று பிரதமர் மோடி கூறினார்.

## ராக்கெட்

### 1. 'விக்ரம்-எஸ்' ராக்கெட்

- இந்திய விண்வெளி வரலாற்றில் முதல் முறையாக, தனியார் புத்தாக்க நிறுவனம் வடிவமைத்த 'விக்ரம் - எஸ்' ராக்கெட், ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து (நவ.18) விண்ணில் ஏவப்படவுள்ளது.
- உலகளாவிய விண்வெளிவர்த்தகத்துக்கு ஈடு கொடுக்கும் வகையில், விண்வெளி ஆய்வில் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பை ஊக்குவிக்க இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) முடிவு செய்தது.

- இதற்காக 2020- ஆம் ஆண்டு 'இன்ஸ்பேஸ்' என்ற அமைப்பு நிறுவப்பட்டது. இதன்மூலம் ராக்கெட், செயற்கைக்கோள்களை வடிவமைக்கும் பணிகளை மேற்கொள்ள தனியார் நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.
- அதன்படி, தெலங்கானா மாநிலம், ஹைதராபாதைச் சேர்ந்த 'ஸ்கைரூட்' எனும் ஏரோஸ்பேஸ் நிறுவனம், தனது ராக்கெட்டுகளை விண்ணில் செலுத்துவதற்காக இஸ்ரோவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.
- தற்போது வெவ்வேறு எடைகளை சுமந்து செல்லக்கூடிய மூன்றுவித ராக்கெட்டுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- அவற்றுக்கு இந்திய விண்வெளி திட்டத்தின் தந்தையான மறைந்த விஞ்ஞானி விக்ரம் சாராபாய் நினைவாக 'விக்ரம்' என்று பெயரிடப்பட்டது.
- அதில், அதிகபட்சம் 480 கிலோ எடையை சுமந்து செல்லக் கூடிய 'விக்ரம்-எஸ்' ராக்கெட்டை சோதனை முயற்சியாக விண்ணில் செலுத்துவதற்கு முடிவானது.
- இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் குழு வடிவமைத்த 3 ஆய்வு சாதனங்கள் இந்த ராக்கெட்டுடன் சேர்த்து அனுப்பப்படவுள்ளன.
- அவை புவி மேற்பரப்பில் இருந்து 120 கிமீ தொலைவில் நிலைநிறுத்தப்பட்டு, ஆய்வுப் பணிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளன.

### 2. நிலவுக்கு ஆய்வுக் கலம்:

- நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்புவதற்கு முன்னோடியாக ஒரு விண் வெளிக்கலத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- ஃபுளோரிடா மாகாணம், கேப்கனாவெரலில் உள்ள ஏவுதளத்திலிருந்து அதிக சக்தி கொண்ட ராக்கெட் மூலம் அந்த ஆய்வுக்கலம் அனுப்பப்பட்டுள்ளது.
- 'ஆர்டமிஸ்-1' என்ற இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்காக கடந்த ஆகஸ்டில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி இரு முறை ஒத்திவைக்கப்பட்டது.
- அப்பல்லோ விண்கலத்திட்டங்கள் நிறுத்தப்பட்ட 50 ஆண்டுகளுக்குப் பிறகு, முதல் முறையாக நிலவுக்கு மனிதர்களை அனுப்புவதற்கான இந்த ஆய்வு திட்டத்தை நாசா உருவாக்கியுள்ளது.
- அதற்கு முன்னோட்டமாக, சோதனை முறையில் 3 மனித மாதிரிகளுடன் அந்த ஆய்வுக்கலத்தை ஏவ திட்டமிடப்பட்டிருந்தது.
- எனினும், ராக்கெட் எரிபொருள் கசிவு மற்றும் என்ஜின் கோளாறு காரணமாக அந்த திட்டம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

## நியமனம்

### 1. நீதி ஆயோக் உறுப்பினராக அரவிந்த் விர்மாணி நியமனம்

- நீதி ஆயோக்கின் முழு நேர உறுப்பினராக முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் விர்மாணி நியமிக்கப்பட்டார்.
- அரவிந்த் விர்மாணி நிதி அமைச்சகத்தில் தலைமைப் பொருளாதார ஆலோசகராகவும், ரிசர்வ் வங்கியின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவிலும் பணியாற்றியுள்ளார்.
- இந்தியா, வங்கதேசம், இலங்கை மற்றும் பூடானை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சர்வதேச நிதியத்துக்கான ( ஐஎம்எஃப்) நிர்வாக இயக்குநராக இருந்துள்ளார்.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசின் பிரதான பொருளாதார ஆலோசனைக் குழுவான நீதி ஆயோக்கில் தற்போது **வி.கே. சரஸ்வத்**, **ரமேஷ் சந்த் மற்றும் வி.கே.பால்** ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.